


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்த விழாவில், டாடா குழும தலைவர் என். சந்திரசேகரனுக்கு நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முகமது நசிமுத்தின், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கொ.வீர ராகவ ராவ், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், டாடா குழும தலைவர் என். சந்திரசேகரன், தலைமை செயல் அலுவலர் வாரன் ஹாரிஸ், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (8.6.2023) ஒரகடத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை - டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் கட்டப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையத்தை திறந்து வைத்து, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டத்தின் கீழ் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிலும் ஐந்து மாணவிகளுக்கு வங்கி பற்று அட்டைகளை (Debit Cards) வழங்கினார். உடன் அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# மண் சார்ந்த கலைஞர்களை நேசித்தவர், மதித்தவர், உணர்ந்தவர் தலைவர் கலைஞர்!

## இயல் இசை நாடக மன்றம் நடத்திய கலைஞர் நூற்றாண்டு விழாவில் - துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

**சென்னை, ஜுன்.9-**

**இயல் இசை நாடக மன்றத்தின் கலைஞர் நூற்றாண்டு விழாவில் மண் சார்ந்த கலைஞர்களை நேசித்தவர், மதித்தவர் தலைவர் கலைஞர் என்று கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. உரையாற்றினார்.**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், 06-06-2023 செவ்வாய்க்கிழமையன்று, திருவள்ளூர் மாவட்டம், அயப்பாக்கத்தில் உள்ள, பேரறிஞர் அண்ணா எழில்மிகு பசுமை பூங்காவில், 100 கிராமிய கலைஞர்கள் பங்குபெறும் கிராமிய கலை விழா நடைபெற்றது.

இதில், திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக்குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்பி அவர்கள் கலந்துகொண்டு நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளை துவக்கி வைத்து, விழாவில் சிறப்புரையாற்றி னார்!

உடன், திமுக பொருளாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, சட்டமன்ற உறுப்பினர் கணபதி, கூடுதல் ஆட்சியர் ரிஷப், இயல் இசை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர், இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் செயலர் விஜயா தாயன்பன், அயப்பாக்கம் ஊராட்சி தலைவர் துரை வீரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசியது வருமாறு :-

"கலைஞர் நூற்றாண்டு விழாவை கிராமிய கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறோம் என்று என்னை கழகப் பொருளாளர் அழைத்தபோது, 'நீ இந்த நிகழ்ச்சி நடக்கிற பூங்காவை பார்க்கவேண்டும். வேறு யாரும் இப்படி ஒரு பூங்காவை அமைக்க முடியாது. அதனால் நீ வந்து இதைப் பார்க்க வேண்டும்' என்று சொல்லித்தான் என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்தார்கள்.

**பொறாமை கொள்ள வைக்கும் பூங்கா**

இங்கே வந்து பார்த்தபோது ஒரு புறம் மிகுந்த மகிழ்ச்சியாகவும், அவரை பாராட்ட வேண்டும் என்று தோன்றும் அதேநேரத்தில்...கொஞ்சம் பொறாமையாகவும் இருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும்.

என்னுடைய தொகுதியிலும் இப்படிப்பட்ட ஒரு பூங்காவை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு விட்டேன். அதுவும் அந்த நூலகத்தைப் பார்க்கும்போது 25 லட்ச ரூபாயிலே இவ்வளவு சிறப்பாக அழகாக அமைக்க முடியுமா என்ற வியப்பையும் ஏற்படுத்துகிறது. நான் என்னோடு வந்திருக்கிற புகைப்படக் கலைஞரிடம், 'இதெல்லாம் தெளிவா படம் எடுத்துட்டு வரணும். நம்மளும் இதே மாதிரி கட்டணும்' என்று கூறி விட்டேன்.

இதுதான் எங்களுக்கு தலைவர் கலைஞர் சொல்லித் தந்திருக்கக் கூடிய பாடம். மக்கள் பணிகளில் ஒருவரை ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு செயல்பட வேண்டும் என்ற பாடத்தைத் தான் தலைவர் கலைஞர் எங்களுக்கு சொல்லித் தந்திருக்கிறார்.

இவ்வளவு அழகான 4 ஏக்கர் அளவில் இங்கே உருவாக்கப்பட்டிக்கக் கூடிய இந்த பூங்காவிலே இல்லாதது என்று எதுவும் இல்லை. அதுவுமில்லாமல் இங்கே எத்தனை விதமான மூலிகைகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா கீரைகளும், எல்லா மூலிகைகளும் மக்கள் பயன்பாட்டுக்காக வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று காணும்போது மிகுந்த மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு நாளைக்கு 5 ஆயிரம் பேர் இங்கே வந்து செல்லக் கூடிய அளவுக்கு வசதியாகவும், இந்த பூங்காவிலே நாட்டுப்புறக் கலைஞர்களுக்காக மேடை அமைத்திருப்பதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

அவரோடு இருக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், அதிகாரிகள் என்று அத்தனை பேருக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தனது பேச்சின் முற்பகுதியில் அயப்பக்கம் ஊராட்சித் தலைவர் துரை.மணியை பாராட்டி வாழ்த்தினார் கனிமொழி எம்பி அவர்கள்.

**கலைஞரும் நாட்டுப்புற கலைஞர்களும்**

தொடர்ந்து அவர் உரையாற்றும் போது, "தலைவர் கலைஞர் அவர்கள் நாட்டுப்புறக் கலைஞர்களை எந்த அளவுக்கு நேசித்திருக்கிறார் என்பது நம் எல்லாருக்கும் தெரியும். அதனால்தான்...அவருடைய நூற்றாண்டு விழாவை கொண்டாடும் போது நாட்டுப்புறக் கலைஞர்களை எல்லாம் அழைத்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இன்று நடக்கக் கூடிய நிகழ்ச்சியிலே கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரை, மயிலாட்டம், புலி யாட்டம், கைசிலம்பம், பெரிய மேளம், நையாண்டி மேளம் என்று இத்தனை வகையான நிகழ்ச்சிகளை நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் இங்கே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் முதன் முதலாக இதுபோன்ற நாட்டுப்புறக் கலைஞர்களை ஒருங்கிணைத்து பொங்கல் விழாவை



ஒட்டி சென்னை சங்கமம் என்ற விழாவாக கொண்டாட வேண்டும் என்று சொன்னபோது...தலைவர் கலைஞர் அத்தனை ஆர்வத்தோடு அந்த நிகழ்ச்சிகளிலே கலந்துகொள்வார்.

**என்னை ஏன் கூப்பிடலை?**

ஒருமுறை இந்த கலைஞர்கள் தங்கியிருந்த இடத்திலே அவர்களோடு நாங்கள் பொங்கல் நிகழ்ச்சிகளை கொண்டாடிக் கொண்டிருந்தோம். அப்போது தலைவர் கலைஞர் என்னை தொலைபேசியில் அழைத்து, 'எங்கே இருக்கிறாய்?' என்று கேட்டார்.

நான், 'இங்க பொங்கல் நிகழ்ச்சிகளை நடத்திக்கிட்டிருக்கோம். சாப்ட்டு மத்தியானமா வர்றேன்' என்று சொன்னேன். உடனே அவர், 'என்னை ஏன் கூப்பிடலை?' என்று கேட்டார்.

நான் தலைவர் கலைஞரிடம், 'இது முதலமைச்சர் கலந்துக்குற அளவுக்கெல்லாம் பெரிய நிகழ்ச்சி கிடையாது. சும்மா நாங்க ஒரு சாமியானா போட்டு எங்களுக்குள்ள நடத்திக்கிறோம்' என்று சொன்னேன். '

அப்போது கலைஞர் பிடிவாதமாக, 'நான் வந்தே தீருவேன். நீ எப்படி என்னை அழைக்காமல் விட்டாய்?' என்று கேட்டுவிட்டு கோட்டையில் இருந்து கிளம்பி, அந்த நிகழ்ச்சி நடந்த இடத்துக்கு எந்த வித முன்னேற்பாடு களும் இல்லாமல் வந்துவிட்டார். அங்கே அந்த கலைஞர்கள் நடனமாடிக் கொண்டிருப்பதை உட்கார்ந்து கண்டுகளித்தார்.

**குழந்தைக் கலைஞர்களுக்கு கலைஞர் சொன்ன அறிவுரை**

அப்போது இரண்டு குழந்தைகள் ஐந்து வயது இருக்கக் கூடிய இரு குழந்தைகள் மிக அழகாக தப்பாட்டம் ஆடினார்கள். சுற்றியிருந்த அத்தனை பேரும் அந்த குழந்தைகளைப் பாராட்டிக் கொண்டிருந்தோம்.

அப்போது முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அந்த குழந்தைகளை அருகே அழைத்து, 'பறை வாசிப்பது என்பது கலை. ரொம்ப மகிழ்ச்சி., நல்லா வாசிக்கிறீங்க. ஆனா அதேநேரம் படிப்பை விட்டுடக் கூடாது. நல்லா படிக்கணும்' என்று அந்த குழந்தைகளுக்கு அறிவுரை சொன்னார்.

இது நடந்த பிறகு ஒவ்வொரு ஆண்டும் அந்த குழந்தைகள் எங்க இருக்காங்க, என்ன பண்றாங்க என்று தொடர்ந்து நான் விசாரித்துக் கொண்டிருந்தேன். ஆனால் பலருக்கும் அந்தக் குழந்தைகள் எங்கே இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

இந்த ஆண்டு தளபதி ஆட்சியிலே சென்னை சங்கமத்தை அரசாங்கமே எடுத்து நடத்தும் என்று அறிவித்த நிலையிலே... அந்த இரண்டு பேரையும் மறுபடியும் சந்தித்தேன். அந்த இருவரும் என்னிடம் வந்து, 'அக்கா ஞாபகம் இருக்கா உங்களுக்கு? தலைவர் கலைஞர் அவர்கள் எங்களைத்தான் பாராட்டி நல்லா படிக்கணும்னு சொன்னாங்க' என்று சொன்னபோது எனக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.'

என்ன படிக்கிறீங்க என்று கேட்டேன். ஒரு பிள்ளை பயோ கெமிஸ்ட்ரி படிப்பதாகவும், இன்னொருவர் லயோலா கல்லூரியில் படிப்பதாகவும் சொன்னார்கள். தலைவர் கலைஞரின் கனவை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்று இன்னும் கூடுதலாக மகிழ்ந்தேன்.

கிராமப்புற நிகழ்ச்சிகளை நடத்துவதற்காகவே தனது சொந்த பணத்தில் இருந்து ஒரு கோடி ரூபாயை தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்,

**மண் சார்ந்த கலைஞர்கள்: தலைவரை மிஞ்சும் தளபதி**

இந்த ஆண்டு மறுபடியும் கலை நிகழ்ச்சிகளை நடத்தும்போது முதலமைச்சராக இருக்கக் கூடிய அண்ணன் தளபதியிடம் நாங்கள் கோரிக்கை வைத்தோம். 'நாட்டுப்புற கலைஞர்களுக்கு அளிக்கும் சம்பளத்தை இரண்டு மடங்காக உயர்த்தித் தரவேண்டும்' என்று. அப்போது அதிகாரிகள், 'ரொம்ப ஜாஸ்தியா கேட்குறீங்க' என்று சொன்னார்கள். அப்போது முதலமைச்சர் தளபதி அவர்கள், 'பரவாயில்லை. அவங்க எல்லாம் கொரோனா காலத்துல எந்த நிகழ்ச்சியும் இல்லாம அவதிப்பட்டாங்க. அதனால அவங்க கேட்க்குற பணத்தை நாம வழங்க வேண்டும்' என்று சொல்லி உடனடியாக ஏற்றுக் கொண்டார்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் நாம் எப்படிப்பட்ட சமூகத்திலே இருந்தோம், அந்த பழக்க வழக்கங்கள் என்ன, பண்பாடு என்ன, கலாச்சாரம் என்ன என்பது பற்றி புரிந்து கொள்ள நாம் சங்கத் தமிழை நோக்கித்தான் போக வேண்டியிருக்கிறது. அதில் சொல்லப்பட்டிருக்கிற பாடல் வரிகள் மூலமாகத்தான் நம்மை நமது சரித்திரத்தைப் புரிந்துகொள்ள முடிகிற நிலையிலே நாம் இருக்கிறோம்.

**சங்கத் தமிழுக்குப் பிறகு மக்களைப் பற்றி பேசும் கலை!**

அப்படிப்பட்ட சங்கத் தமிழுக்குப் பிறகு பல கலை வடிவங்கள் வந்தன. ஆனால் அவை மனிதர்களைப் பற்றி மக்களைப் பற்றி மண்ணைப் பற்றி நமது வாழ்வியலைப் பற்றி சொல்வதில்லை.

சங்கத் தமிழுக்குப் பிறகு தமிழ் நாட்டிலே மண்ணைப் பற்றி மக்களைப் பற்றி பேசுவது இந்த மண் சார்ந்த கலைஞர்கள் மட்டும்தான்.

திரைப்படங்களில் சில இது போன்ற மக்கள் பிரச்சினைகளை பேசுகின்றன. தலைவர் கலைஞரின் பராசக்தி அதன் பின் அவர் வழியிலே வந்த திராவிட இயக்கத்தினரின் திரைப்படங்கள் மக்களைப் பற்றி பேசின. சாதாரண, சாமானிய மக்கள் அன்றாடம் சந்திக்கும் கஷ்டங்களை எடுத்துச் சொல்லி யிருக்கின்றன.

ஆனால்...நம்முடைய பாரம்பரிய கலைகள் என்று சொல்லும்போது இந்த மண் சார்ந்த கலைஞர்களின் வார்த்தைகளிலே வடிவங்களிலே மட்டும்தான் தமிழனின் வாழ்க்கை இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

அதனால்தான் இந்த கலைஞர்களை தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு நாளும் நேசித்தார். அவர்களை மிகப்பெரிய அளவிலே கொண்டாடிய தலைவர், அவர்களை மதித்த, புரிந்து கொண்ட, உணர்ந்த தலைவர் கலைஞர். அதற்காகத்தான் கலைஞரின் நூற்றாண்டு விழாவிலே இந்த கலைஞர்களை அழைத்து மறுபடியும் இந்த நாட்டின் மீது அக்கறையோடு கலை நிகழ்ச்சிகளை நடத்துங்கள், மக்களிடம் செய்திகளை கொண்டு போய் சேருங்கள் என்று சொல்லி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

பல்வேறு பரிமாணங்கள் கொண்ட ஒரு தலைவரான கலைஞரை இங்கே இருக்கும் அத்தனை பேரும் சந்தித்திருக்கிறோம். அவரோடு பல மணி நேரம் பேசியிருக்கிறோம். சில பேர் அதிகமாக பேசியிருப்பார்கள், சில பேர் குறைவாக பேசியிருப்பார்கள்.

நம்முடைய கழகப் பொருளாளரும் நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவருமான டி.ஆர்.பாலு அவர்கள் தலைவருக்கு வண்டி ஓட்டியிருக்கிறார். எமர்ஜென்சியிலே தலைவர் கலைஞருக்கு வண்டி ஓட்டக் கூடியவர்கள் பயந்து ஓடிவிட்டார்கள். அப்போது அவருக்கு கார் ஓட்டியவர் நமது பொருளாளர்தான். இப்படி தலைவர் கலைஞரின் பல்வேறு பரிமாணங்களை ஒவ்வொரு நாளும் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றவர் அவர்.

**ஆர்ட்டிஃபிசியல் இன்டெலிஜென்ஸ் வரை அப்டேட் ஆகியிருப்பார்**

இறுதிநாள் வரை ஒவ்வொரு நாளும் நம்மை ஆச்சரியப்படுத்தக் கூடிய தலைவராகவே தலைவர் கலைஞர் வாழ்ந்திருக்கிறார். இன்று புதிதாக வந்த டெக்னாலஜியை கூட அவரால் புரிந்து கொள்ள முடியும், அதையும் அவரால் பயன்படுத்த முடியும்.

நாடகங்களில் ஆரம்பித்து திரைப் படங்களுக்கு எழுதுகிறார். திரைப் படங்களைத் தொடர்ந்து தொலைக் காட்சிகளுக்கு எழுதினார். புதிதாக என்ன தொழில் நுட்பங்கள் வருகிறதோ அதற்கெல்லாம் தன்னை அடாப்ட் செய்துகொள்ளக் கூடிய ஒரு மனிதனாக ஒரு தலைவராக அவர் வாழ்ந்திருக்கிறார்.

எந்த மீடியமாக இருந்தாலும் அதற்குள் தன்னால் தான் சொல்ல வேண்டிய கருத்துகளை, தன் கொள்கையை மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலே தெளிவாக இருந்தவர் தலைவர் கலைஞர்.

இன்றைக்கு அவர் எழுதிக் கொண்டிருந்தால் ஆர்டிஃபிசியல் இன்டெலிஜன்ஸ் என்று சொல்லக் கூடிய நுட்பத்தையும் புரிந்து கொண்டு அதன் மூலமும் எழுதக் கூடிய தலைவராக நிச்சயமாக செயல்பட்டிருப்பார்.

நாடகமாக இருக்கட்டும், கவிதையாக இருக்கட்டும், அரசியலாக இருக்கட்டும், நிர்வாகமாக இருக்கட்டும் தான் ஈடுபட்ட அத்தனை துறைகளிலும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து அதில் வெற்றியை கண்ட தலைவர் நமது தலைவர் கலைஞர்.

இந்த நூற்றாண்டு விழாவை ஓர் ஆண்டு முழுதும் கொண்டாடப் போகிறோம். ஒரு மனிதரைப் பற்றி ஒவ்வொரு நாளும் ஓர் ஆண்டு முழுதும் பேசப்படக் கூடிய அளவுக்கு ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் நமது தலைவர் கலைஞர்தான். அதையும் தாண்டி அவரைப் பற்றிய செய்திகளை நம்மால் சொல்ல முடியும்".

இவ்வாறு கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி. அவர்கள் உரையாற்றினார்.

### சென்னை ஸ்டான்லி - தருமபுரி மருத்துவக்கல்லூரிகள் தொடர்ந்து இயங்க அனுமதி!

# மருத்துவ இடங்களுக்கு மாநில அரசே கலந்தாய்வு நடத்தும்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, ஜுன் 9 -

சென்னை ஸ்டான்லி மற்றும் தருமபுரி மருத்துவக்கல்லூரிகள் தொடர்ந்து இயங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மருத்துவ மையத்தை ஆய்வு செய்த பின் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:



சென்னை ஸ்டான்லி மருத்துவக்கல்லூரி மற்றும் தருமபுரி மருத்துவக்கல்லூரிகளுக்கு மீண்டும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. ரத்து செய்யப்படுவதாக முன்பு அனுப்பப்பட்ட நோட்டீஸ் திரும்பப் பெறப்பட்டது. தற்போது சென்னை ஸ்டான்லி மற்றும் தருமபுரி அரசு மருத்துவ கல்லூரிகளுக்கான அங்கீகார ரத்து சான்று திரும்பப் பெறப்பட்டு அடுத்த 5 ஆண்டுகளுக்கு தடையில்லா சான்று வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவக் கல்லூரிகள் மூடப்படுவது போன்ற மாயத்தோற்றம் உருவாக்கப்பட்டது. மருத்துவக் கல்லூரிகளில் சி.சி.டி.வி., பயோமெட்ரிக் போன்ற குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளன.அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள ஓரிரு சிறு குறைகளும் சரி செய்யப்பட்டு அறிக்கை வழங்கப்பட்டது. தேசிய மருத்துவ ஆணைய குழுவினர் நேற்று கல்லூரிகளுக்கு நேரடியாக வந்து ஆய்வு செய்தனர்.

மருத்துவ இடங்களுக்கு பொது கலந்தாய்வு வரைவு ஒன்றிய அரசு அனுப்பியது; இதற்கு, கலந்தாய்வு மாநில உரிமை சார்ந்தது என குறிப்பிட்டு ஆட்சேபனை தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டது. பொது கலந்தாய்வு இல்லை எனவும் மாநில அரசுகளே கலந்தாய்வு நடத்திக் கொள்ளலாம் என ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

# பட்டமளிப்பு விழா தாமதத்திற்கு ஆளுநரே காரணம்!

## அமைச்சர் க.பொன்முடி குற்றச்சாட்டு!

சென்னை, ஜுன் 9 -

பட்டமளிப்பு விழா காலதாமதத்திற்கான காரணத்தை அமைச்சர் க. பொன்முடி விளக்கியுள்ளார். சென்னையில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:-

பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பிக்கும் தேதி முடிவடைந்தது, அதற்கான கலந்தாய்வு நடைபெற உள்ளது. சென்ற ஆண்டை விட இந்தாண்டு 18,510 பேர் அதிகம் விண்ணப்பித்து உள்ளனர்.

'நீட்' தேர்வு முடிவுகள்



வந்தபிறகு பொறியியல் மாணவர் சேர்க்கைக்கான கவுன்சிலிங் தொடங்கும். ஜுலை 2ந்தேதியில் இருந்து கவுன்சிலிங் தொடங்க உள்ளது. பாலிடெக்னிக் கல்லூரிகளில் சேரவும் மாணவர்களிடையே ஆர்வம் உள்ளது.

பல்கலை. பட்டமளிப்பு விழாக்களுக்கு சிறப்பு விருந்தினராக ஒன்றிய அமைச்சர்களை அழைத்து வர வேண்டும் என கவர்னர் விரும்புகிறார். தமிழ்நாட்டில் உள்ள தமிழறிஞர்கள், முன்னாள் துணைவேந்தர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைக்க கவர்னர் விரும்புவதில்லை. இதன் காரணமாகவே தாமதம் ஏற்படுகிறது. கல்லூரி படிப்பை முடித்த 9.29 லட்சம் மாணவர்கள் பட்டம் பெற முடியாமல் காத்திருக்கின்றனர். இதற்கு காரணம் தமிழ்நாடு அரசு கிடையாது.

கோவை பாரதியார் பல்கலைக்கழக துணை வேந்தரை தேர்வு செய்வதற்கான குழு இன்னும் அமைக்கப்படவில்லை என கவர்னர் ரவி கூறியிருப்பது முற்றிலும் தவறான ஒன்று; கடந்த ஆண்டு அக்டோபர் மாதமே சட்டப்படியான 3 பேர் குழு அமைக்கப்பட்டு விட்டது. கவர்னர் எந்த தேதி கேட்டாலும், அதை நாங்கள் கொடுக்கிறோம். அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பட்டமளிப்பு விழா நடத்துவதற்கு கவர்னர் முன்வர வேண்டும். அதற்கு உயர்கல்வித்துறை உறுதுணையாக இருக்கும்.

இவ்வாறு அமைச்சர் க.பொன்முடி பேசினார்.